செய்தி வெளியீடு எண்.837 நாள்.4.10.2008

# செய்தி வெளியீடு

## நெல் கொள்முதல் நிலையங்களில் 20 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை

2008–2009–ம் ஆண்டில் குறுவை கொள்முதல் பணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறுவை கொள்முதல் செய்யப்படும் காலம் மழை பெய்யக்கூடிய காலமாக இருப்பதால் நெல்லில் ஈரப்பதம் அதிகமாக இருக்க வாய்ப்புள்ள நிலையில் 20 சதவீதம் வரை ஈரப்பதமுள்ள நெல்லை கொள்முதல் செய்ய காவிரி பாசன விவசாயிகள் முறையிட்டனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விவசாயிகளின் நலன் கருதி அவர்களுடைய கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து 20 சதவீதம் ஈரப்பதம் வரை உள்ள நெல்லை கொள்முதல் செய்ய ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கொள்முதல் நிலையங்கள், கொள்முதல் பணி மேற்கொள்ளப்படும் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் இன்று (04.10.2008) முதல் 20 சதவீதம் வரை ஈரப்பதமுள்ள நெல் கொள்முதல் செய்யப்படும்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.